இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.2.2.A

எண்ணியல் - கோடிட்ட இடங்களை நிரப்புக - தநாஅபு - பயிற்சி 1.2.1-3,9-10

எண்ணியல் - கோடிட்ட இடங்களை நிரப்புக - தநாஅபு - பயிற்சி 1.2.1-3,9-10

1) கோடிட்ட இடங்களை நிரப்புக.

i) -44 + ____= -88

கண்டுபிடிக்க வேண்டிய எண்ணை x எனக்கொள்க.

-44 + x = -88

x = -88 + 44

x = -44

-44 + (-44) = -88

ii) ____- 75 = -45

கண்டுபிடிக்க வேண்டிய எண்ணை x எனக்கொள்க.

x - 75 = -45

x = -45 + 75

x = 30

30 - 75 = -45

iii) ____- (+50) = -80

கண்டுபிடிக்க வேண்டிய எண்ணை x எனக்கொள்க.

x - (+50) = -80

x - 50 = -80

x = -80 + 50

x = -30

-30 - (+50) = -80

2) சரியா, தவறா எனக் கூறுக.

i) (-675) - (-400) = -1075

-675 - (-400) = -675 + 400

= -275 ≠ -1075

(-675) - (-400) = -1075 என்பது **தவறாகும்.**

ii) 15 - (-18) க்கு 15 + 18 சமமானது.

15 - (-18) = 15 + 18

15 + 18 = 33

33 = 33

LHS = RHS

15 - (-18) க்கு 15 + 18 சமமானது என்பது **சரியாகும்.**

iii) (-45) - (-8) = (-8) - (-45)

-45 + 8 = -8 + 45

-37 ≠ 37

LHS ≠ RHS

(-45) - (-8) = (-8) - (-45) என்பது **தவறாகும்.**

3) கீழுள்ளவற்றின் மதிப்பைக் காண்க.

i) எண்கோட்டைப் பயன்படுத்தித் தீர்க்க: -3 - (-4)

விடைகாணும் படிகள்

- முதலில் எண்கோட்டில் -3-ஐக் குறிக்க பூஜ்ஜியத்தில் தொடங்கி குறைமுழுத் திசையை நோக்கி அதாவது இடதுபுறமாக 3 அலகுகள் நகர வேண்டும்.
- பின்னர் -(-4) = 4-ஐக் குறிக்க -3-லிருந்து 4 அலகுகள் மிகைமுழுத் திசையை நோக்கி அதாவது வலதுபுறமாக நகர வேண்டும்.



(-3) - (-4) = 1

ii) எண்கோட்டைப் பயன்படுத்தித் தீர்க்க: 7 - (-10)

விடைகாணும் படிகள்

- முதலில் எண்கோட்டில் 7-ஐக் குறிக்க பூஜ்ஜியத்தில் தொடங்கி மிகைமுழுத் திசையை நோக்கி அதாவது வலதுபுறமாக 7 அலகுகள் நகர வேண்டும்.
- பின்னர் -(-10) = 10 -ஐக் குறிக்க 7-லிருந்து 10 அலகுகள் மிகைமுழுத் திசையை நோக்கி அதாவது வலதுபுறமாக நகர வேண்டும்.



7 - (-10) = 17

iii) 35 - (-64)

35 - (-64) = 35 + 64

= 99

35 - (-64) = 99

iv) -200 - (+100)

-200 - (+100) = -200 - 100

= -300

-200 - (+100) = -300

9) (-5) - (-18) = ____

(-5) - (-18) = -5 + 18

= 13

i) 23 ii) -13 iii) 13 ✓ iv) -23

10) (-100) - 0 + 100 = ____

(-100) - 0 + 100 = -100 + 100

= 0

i) 200 ii) 0 ✓ iii) 100 iv) -200

Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 1st June, 2022 :: 17:21 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. RegdJt/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**